


**09.02.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **தேர்வெழுதும் மாணாக்கரின் மன அழுத்தத்தை** களையும் பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்வில் பிரதமர் திரு. நரேந்திரமோடி நாளை கலந்துரையாடுகிறார்.

2. **வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நடவடிக்கைகள்** முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

3. **வேலூர் ரயிலில் தாக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவரும் கர்பிணி** பெண்ணின் குடும்பத்திற்கு 3 லட்சரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

4. **ராமேஸ்வரத்தை சேர்ந்த 14 மீனவர்கள், இலங்கை** கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

5. **கட்டக்கில் நடைபெறும் இந்தியாவிற்கு எதிரான 2-வது** ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து முதலில் பேட்செய்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**பரிக்ஷா பே சர்ச்சா**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி, பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்வில் நாளை** கலந்துரையாடுகிறார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் தமிழகம், கர்நாடகா, கேரளா உள்ளிட்ட அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 36 மாணாக்கர் பிரதமருடன் நேரில் கலந்துரையாடுகின்றனர்.

நாடுமுழுவதும் 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணாக்கரின் தேர்வு தொடர்பான மன அழுத்தத்தை போக்கும் வகையில் பிரதமர் இந்நிகழ்ச்சியில் உரையாடவுள்ளார்.

இந்த ஆண்டு பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களும் இக்கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர்.

பிரதமரின் இந்த முன்னெடுப்பால் மாணாக்கர் நம்பிக்கையுடன் தேர்வை எதிர்கொள்வதாக சேலம் மாவட்ட ஆசிரியர்கள் மற்றும் சிவகங்கையை சேர்ந்த மாணவர் தெரிவிக்கின்றனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**எல். முருகன்**

**அனைத்து தரப்பினரையும்** உள்ளடக்கிய வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் பட்ஜெட் தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் இன்று உரையாற்றிய அவர், நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு திறன்பயிற்சி வழங்கி வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நடவடிக்கைகளுக்காக பட்ஜெட்டில் போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

தரமான பள்ளி கல்வி அனைவராலும் ஏற்கத்தக்க உயர்தர சுகாதார வசதி உள்ளிட்ட தொலைநோக்கு சிந்தனையுடன் அரசு செயல்படுவதாக கூறிய அமைச்சர், நாட்டில் வறுமையை முற்றிலும் ஒழிக்கும் நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப் படுவதாக கூறினார்.

பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தில் மகளிர் பெயரில் பட்டா வழங்கப்படுவதை சுட்டிக்காட்டிய அமைச்சர், மகளிர் ஆளுமையை மேம்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

உலகத்திற்கே உணவு வழங்கும் நாடாக இந்தியாவை மேம்படுத்த வேளாண் துறைக்கு இந்த பட்ஜெட்டில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**அதிஷி**

**டெல்லி முதலமைச்சர் அதிஷி தனது பதவியை இன்று** ராஜினாமா செய்துள்ளார்.

ராஜினாமா கடிதத்தை டெல்லி துணை நிலை ஆளுநர் திரு. வீ.கே. சக்சேனாவிடம் அளித்தார்.

டெல்லி முதலமைச்சராக ஆம்ஆத்மியின் கட்சியின் அதிஷி, கடந்த செப்டம்பர் மாதம் பதவியேற்றார்.

கடந்த 5-ம் தேதி நடைபெற்ற டெல்லி சட்டப்பேரவை தேர்தலில் மொத்தமுள்ள 70 தொகுதிகளில் 48 இடங்களில் பி.ஜே.பி. வெற்றிபெற்று ஆட்சியமைக்கவுள்ள நிலையில் அதிஷி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. வீரேந்திர சச்தேவா, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அமெரிக்க பயணத்திற்குபின் டெல்லியில் அடுத்தவாரம் ஆட்சியமைக்க உரிமை கோரவுள்ளதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

**விமான கண்காட்சி**

**ஆசியாவின் மிகப்பெரிய விமான கண்காட்சியான** ஏரோ இந்தியா பெங்களூருவில் நாளை தொடங்குகிறது.

5 நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில் விண்வெளி பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் புதுமை, நவீன யுக்திகள் ஒருங்கிணைப்பு உள்ளிட்டவற்றை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

விண்வெளி பாதுகாப்புத்துறையில் சர்வதேச ஒத்துழைப்பை ஒருங்கிணைக்கும் வகையில் பல்வேறு நாடுகளை சேர்ந்த விமான, தொழில் துறையினர் இதில் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖

**EON**

**சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் இந்திய** கடற்படைக்கு 642 கோடி ரூபாய் மதிப்பில் **28 EON-51** கருவிகளை பெறுவதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில்துறைகளின் பங்களிப்புடன் இலக்குகளை தேடுதல், கண்டறிதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள இது வகைசெய்யும்.

❖❖❖❖❖❖❖

**புத்தக கண்காட்சி**

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்று வரும் 52-வது உலக புத்தக கண்காட்சி இன்றுடன் நிறைவடைகிறது

9 நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில் பிரான்ஸ், அர்ஜெண்டினா, ஸ்பெயின், கொலம்பியா உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த பதிப்பாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் - நிதியுதவி

கோவை - திருப்பதி விரைவு ரயிலிலிருந்து தள்ளிவிடப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் கர்பிணி பெண்ணிற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

ராணிப்பேட்டை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அப்பெண்ணின் முழு மருத்துவ செலவையும் அரசே ஏற்கும் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

இக்குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

உதயநிதி ஸ்டாலின்

திருச்சி கம்பரசம் பேட்டையில் 13 கோடியே 70 லட்ச ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள பறவைகள் பூங்காவை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்துவைக்கிறார்.

6 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள இந்த பூங்காவில் அரிய வெளிநாட்டு பறவைகள், வீட்டு விலங்குகள், பண்டைய தமிழர்களின் ஐந்திணை வாழ்வியலை பிரதிபலிக்கும் வகையிலான அமைவிடங்கள் உள்ளிட்டவைகள் இடம்பெற்றுள்ளன.

❖❖❖❖❖❖❖

கீதாஜீவன்

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட மீளவிட்டான், சங்கரபேரி, முத்தம்மாள் காலனி, கிருஷ்ணராஜபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் வீட்டுமனைகளுக்கு கனிணி பட்டா பெறுவதற்கான சிறப்பு முகாமை மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் இன்று தொடங்கிவைத்தார்.

இதில் பட்டா கோரி விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக பட்டாக்கள் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖

**மீனவர்கள்**

**எல்லை தாண்டி மீன்பிடித்ததாக 14 ராமேஸ்வர மீனவர்களை இலங்கை** கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களின் 2 விசைப்படகுகளை பறிமுதல் செய்ததுடன் கிளிநொச்சி கடற்படை முகாமிற்கு மீனவர்கள் கொண்டுசெல்லப் பட்டதாக மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**தேர்வாணையம்**

IAS IPS உள்ளிட்ட குடிமைப் பணிகளுக்கான முதல்நிலை தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை வரும் 18-ம் தேதிவரை நீட்டிக்கப் பட்டுள்ளதாக மத்திய பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

வரும் மே 25-ம் தேதி நடைபெறவுள்ள இத்தேர்வின் மூலம் நாடுமுழுவதும் 979 காலிப்பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

❖❖❖❖❖❖❖

**குடற்புழு நீக்க மாத்திரைகள்**

**தமிழகத்தில் தேசிய குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும்** முகாம் நாளை நடைபெறவுள்ளதாக சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

பள்ளி கல்லூரிகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் 1 முதல் 19 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், வளர் இளம் பருவத்தினருக்கு இம்மாத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

திருச்சி, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**நாமக்கல் வாய்ஸ்**

**நாமக்கல் மாவட்டம் அணைபாளையம் ஏரியில்** நிலவும் ரம்மியமான சூழல் காரணமாக வெள்ளை நாரை, கொக்கு, நீர்கோழி உள்ளிட்ட பல்வேறு வயைான பறவையினங்கள் காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 3-வது புத்தகத் திருவிழா வரும்** 14-ம் தேதி தொடங்கி 23-ம் தேதிவரை நடைபெறுகிறது.

90 அரங்குகளில் பல்வேறு தலைப்புகளில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இதில் இடம்பெறும்.

மாணாக்கர் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் புத்தகத்திருவிழாவில் கலந்துகொண்டு அதிகளவில் புத்தகங்களை வாங்கி பயன்பெறுமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுசுகாதாரத் துறையில்** காலியாக உள்ள உணவியல் நிபுணர் அறுவை அரங்கு நுட்புணர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதால் தகுதியுடையோர் வரும் 20-ம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மது மற்றும் போதை பொருட்கள்** தொடர்பான புகார்களை பொதுமக்கள் 1058 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம் என ஆட்சித்தலைவர்
திரு. பிரசாந்த் கூறியுள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் கொத்தடிமை தொழிலாளர்** முறையை முற்றிலும் ஒழிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கான கையெழுத்து இயக்கத்தை இன்று தொடங்கிவைத்த அவர், தகவல் அளிப்பவர்களின் விவரங்கள் ரகசியமாக பாதுகாக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

**கோவில்**

**கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி அருள்மிகு** ஸ்ரீ பூதலிங்க சுவாமி சிவகாமி அம்பாள் தேரோட்டத்தை முன்னிட்டு தோவாளை

வட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவித்து ஆட்சித் தலைவர் திருமதி. அழகுமீனா உத்தரவிட்டுள்ளார்.

இதற்குபதிலாக வரும் 22-ம் தேதி சனிக்கிழமை வேலைநாளாகும்.

**சோளிங்கர் அருள்மிகு யோக நரசிம்மர்** மலைக்கோவில் ரோப்கார் சேவை மாதாந்திர பராமரிப்பு பணிகள் காரணமாக இன்றுமுதல் 4 நாட்களுக்கு நிறுத்தப்படுவதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**கட்டக்கில் நடைபெறும் இந்தியாவிற்கு எதிரான** 2-வது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்யும் இங்கிலாந்து சற்றுமுன் 5 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 35 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**